DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.115/2024 | Deposition of Witness for : PW1 |
| Name : கனகம்மாள் | Father/Husband Name : தர்மராஜ் |
| Age : 40 | Village : சிவந்தியாபுரம் |
| Taluk : நாங்குநேரி | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08 June 2026.

Accused absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது சிவந்தியாபுரத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். எதிரியை வழக்கு சம்பவத்தின்போது தெரியும். எனது கணவர் தர்மராஜ் 3 ஆண்டுகளுக்கு முன்பு விபத்தில் இறந்துவிட்டார். எனக்கு ஒரு மகள் மற்றும் மகன் உள்ளார்கள். எனது இளைய மகன் பெருமாள், வயது 16 (2023 ல்) என்பவர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி மன்னார்புரத்தில் 10 வகுப்பு படித்து வந்தார்.

2. கடந்த 01.11.2023 அன்று எனது அக்கா மகள் திருமணத்திற்கு நானும் எனது மகன் பெருமாளும் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சென்றுவிட்டு சாத்தான்குளம் சரஸ்வதி மகால் செல்வதற்காக எனது மகன் பல்சர் NS 200 சிவப்பு நிற TN 76 AR 1463 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் பட்டார்புரம் முத்துவின் மகன் லெட்சுமணன் என்பவர் வாகனத்தை ஓட்ட சிவந்தியாபுரம் லெட்சுமணன் மகன் சதீஸ் என்பவர் நடுவிலும் எனது மகன் பெருமாள் பின்னால் உட்கார்ந்து சென்றுகொண்டிருந்தார்கள். நான் எனது உறவினர்களுடன் மேக்சி கேப் வேனில் பின்னால் வந்தோம். அப்போது காலை சுமார் 10.45 மணிக்கு எனது மகன் வாகனம் மெஞ்ஞானபுரம் பஸ் நிறுத்தத்திற்கு சற்று தள்ளி சாத்தான்குளம் செல்லும் சாலையில் KSR டிராவல்ஸ் கடைக்கு எதிரே சென்றபோது அதே ரோட்டில் அதே திசையில் எனது மகன் சென்ற வாகனத்திற்கு பின்னால் வந்த TN 72 CA 2268 TATA Prima LX12 சக்கர டாரஸ் லாரியை ஓட்டி வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து நாங்குநேரி தாலுகா, கடையனேரி, 103, வெங்கட்ராயபுரம், பெருமாள் மகன் விஜயகுமார் என்பவர் கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்து லாரியின் மையப்பகுதி எனது மகன் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்பக்கம் மோதியதில் இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் நிலைதடுமாறி கீழே லாரியின் இடது பக்கம் என் மகனும், வலது பக்கம் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற லெட்சுமணன், சதீஸ் ஆகிய இருவரும் கீழே விழுந்ததில் அவர்கள் இருவருக்கும் லோசன காயம் ஏற்பட்டது. லாரியின் இடது பக்கம் விழுந்த எனது மகன் பெருமாளின் வயிற்றுப்பக்கத்தில் லாரியின் இடது முன்பக்க டயர் ஏறி இறங்கியது. அதில் என் மகனுக்கு வயிற்று பகுதியில் குடல்கள் வெளியே

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.08 17:53:00 +0530 

தெரிந்தவாறும் வலது கையில் இரத்தக்காயமும் ஏற்பட்டது. உடனே நானும் எனது அக்கா மருமகன் முத்து என்பவருடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு எனது மகனை கொண்டு சென்றோம். அங்கு மருத்துவமனையில் எனது மகனை பரிசோதித்து பார்த்த மருத்துவர் எனது மகன் பெருமாள் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார். எனவே சம்பவத்தில் விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்கக்கேட்டு மெஞ்ஞானபுரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

3. நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைத்தான் புகார் மனுவிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவை நான் தான் கைப்பட எழுதினேன் என்றால் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது என்றால் சரிதான். இறந்துபோன என்னுடைய மகன் சென்ற வாகனத்தின் வண்டி எண் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் பல்சர் TN 76 1468 ஆகும். அந்த பல்சர் வாகனத்தில் உரிமையாளர் யார் என்றாலும் அந்த வண்டி யார் பெயரில் Register செய்ப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் திருச்செந்தூர் முருகன் கோவிலில் திருமணம் முடிந்து வரும்போது வழக்கில் இறந்துபோன என்னுடைய மகன் பைக்கில் முன்பு சென்றார், நானும் என்னுடைய மற்ற உறவினர்களும் என்னுடைய மகன் சென்ற பைக்கிற்கு பின்னால் வேனில் வந்தோம், அவர் சென்ற பைக்கை பின்தொடர்ந்துதான் எங்களுடைய வேன் வந்து கொண்டிருந்தது. வழக்கில் இறந்துபோன என்னுடைய மகன் சென்ற வாகனத்தை யார் ஓட்டியது என்றால் என்னுடைய அக்கா மகன் லெட்சுமணன் என்பவர் ஓட்டினார். லெட்சுமணன் என்பவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. என்னுடைய மகன் சென்ற பைக்கில் உடன் யார் யாரெல்லாம் சென்றார்கள் என்றால் அக்கா மகன் லெட்சுமணன் பைக்கை ஓட்டினார், சதீஸ் நடுவில் இருந்தார், அவருக்கு பின்னால் இறந்துபோன என்னுடைய மகன் பெருமாள் இருந்தார். பைக்கில் சென்ற நபர்கள் யாரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் தெரியாது, நான் அதைப் பார்க்கவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எந்த திசையை நோக்கி வந்துகொண்டிருந்தேன் என்றால் திசை தெரியவில்லை, திருச்செந்தூரில் இருந்து சாத்தான்குளம் நோக்கி வேனில் வந்து கொண்டிருந்தோம். சம்பவம் நடந்த இடம் நாலுமுக்கு சாலை என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மெஞ்ஞானபுரம் நாலுமுக்கு சாலையில் இருந்து திரும்பும் சாலையில் உடனடியாக இரண்டு வளைவு உள்ளது என்பதால் அதிவேகமாக வண்டியை ஓட்ட முடியாது என்றால் தெரியாது. சம்பவம் நடந்த இடத்தில் இரண்டு வேகத்தடைகள் அடுத்தடுத்து அமைந்துள்ளது என்றால் தெரியாது. வழக்கு சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் காலை 10.45 மணிக்கு நடைபெற்றது. வாகனத்தை ஓட்டிய லெட்சுமணன் என்பவர் போக்குவரத்து விதிமுறைகளை கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. இருவர்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.08 17:53:15 +0530

மட்டுமே செல்லக்கூடிய இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் சென்றதால் நிலைதடுமாறி கீழே விழுந்ததால் தான் விபத்து நேரிட்டது என்றால் சரியல்ல. வழக்கில் இறந்துபோன என்னுடைய மகன் சென்ற பைக்கின் மீது மோதிய லாரி எந்த திசையில் இருந்து வந்தது என்றால் என்னுடைய மகன் சென்ற பைக்கின் பின்னால் வந்தது.

4. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் வேறு ஒருவர் சொல்லித்தான் எனக்கு வழக்கு சம்பவம் தெரியும் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் விபத்து நடந்த அன்றைய தினமே புகார் மனு கொடுத்தேன், அன்றைய தினம் மதியம் 01.30 மணியளவில் போலீசார் விசாரித்தார்கள். சம்பவம் நடந்தவுடன் 108 ஆம்புலன்ஸ் எவ்வளவு நேரம் கழித்து வந்தது என்றால் அரை மணி நேரம் கழித்து வந்தது. நாங்கள் எந்த மருத்துவமனைக்கு என்னுடைய மகனை அழைத்துச் சென்றேன் என்றால் திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். எத்தனை மணிக்கு திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகம் இல்லை. என்னை யார் விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஒரு போலீசார் என்னை விசாரித்தார், யார் என்ற விபரம் எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய நபர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் சம்பவம் நடந்த போது அவரை எனக்கு தெரியாது, ஆனால் போலீசார் கூறிய பின்பு அவரை எனக்கு தெரியும். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, என்னுடைய மகன் என் கண்முன்பு இறந்ததை நான் பார்த்தேன். விபத்தை ஏற்படுத்திய வண்டியின் விபரம் குறித்து என்னால் கூற முடியுமா என்றால் அது டாரஸ் லாரி ஆகும், அதில் நிறைய டயர்கள் இருந்தது. நான் இழப்பீடு பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.08 17:53:20 +0530

Judicial Magistrate, Sathankulam.